ஸ்ரீமந் நாதமுநிகள்
ஸ்ரீ ஆளவந்தார்

31

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1926

ரிஜிஸ்தர் செய்தது] [விலை 2 அணா.

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS.

A

ஸ்ரீமந் நாதமுநிகள்

1. திருவவதாரம்

பல்லாண்டுகட்கு முன்னே மன்னார்குடி யென்று வழங்கும் வீரநாராயணபுரத்திலே ஈச்வரபட்டாழ்வார் என்னும் பாகவதர் ஒருவர் வஸித்து வந்தார். அவர் அப்பதியில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் மன்னனார்க்குக் கைங்கர்யம் புரிந்து வருகையில் அவ் வெம்பெருமானது திருவருளால் அவ்வைணவர்க்கு ஒரு குழந்தை பிறந்தது. ஈச்வர பட்டர் அக் குழந்தையின் ரூபலாவண்யத்தையும் முகப் பொலிவையுங் கண்டு களித்து அதற்கு ரங்கநாதன் என்னும் திருப்பேரிட்டு அருமையுடன் அதை வளர்த்து வந்தார்.

அக் குழந்தைக்குச் செய்யவேண்டிய ஜாதகர்ம, அந்நப்ராசன, சௌள, உபநயனாதிகளை உரிய காலத்தே செய்து வேதம் முதலிய ஸகல கலைகளையுங் கற்பிக்கப் பிள்ளையாரும் வைதிக நூல்கள் யாவற்றையும் சங்கையறக் கற்று யாவரும் அவர் பெருமையைக் கொண்டாடி மகிழும்படி அன்பு, தயை, பொறை, விநயம் முதலிய அருங் குணங்களை வஹித்து மஹா சீலராய் நல்லொழுக்கங்களோடுங் கூடி விளங்கினார். அவர் தமது தந்தையாருடன் மன்னனார் ஆலயமடைந்து அவ் வெம்பெருமானைத் தினந்தோறும்

ஸேவித்து அவ் வெம்பெருமானுக்குத் தம்மாலான கைங்கர்யங்களைக் குறைவின்றி நடத்தி வருவாராயினர்.

ஒருநாள் ஈச்வர பட்டர் திருக்குமாரருடன் மன்னனார் ஸந்நிதி அடைந்து அவரடிகளில் தண்டன் ஸமர்ப்பித்து, "ஸ்வாமீ! தேவரீர் அவதரித்துப் பல விளையாடல்கள் புரிந்தருளிய மதுரை, திருவாய்ப்பாடி, ப்ருந்தாவநம், யமுநா தீரம், கோவர்த்தனம், த்வாரகை, அயோத்யை, ஸாளக்ராமம், பதரிகாச்ரமம், நைமிசாரண்யம், அஹோபிலம் முதலிய வடநாட்டுத் திருப்பதிகளுக்குச் சென்று ஸேவித்து வர அநுமதியளிக்க வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்து அவ்வெம் பெருமானது நியமநம் பெற்று வீரநாராயண புரத்தினின்றும் திவ்ய தேச யாத்ரைக்குப் புறப்பட்டார்.

ஈச்வர பட்டர் ஸகுடும்பராய்ப் புறப்பட்டு உத்தர தேசத்துள்ள மதுரை முதலிய தலங்களுக்குச் சென்று ஆங்காங்கு கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் எம்பெருமான்களைக் கண்ணார ஸேவித்துப் பின் அதி கம்பீரமாய்ப் பல சுழிகளை யுடைத்தாய்ப் பெருகா நின்ற யமுனா தீரத்திலேயுள்ள ஸ்ரீ கோவர்த்தன புரம் என்னும் க்ராமத்துக் கெழுந்தருளினார். அந்தத் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் யமுனைத் துறைவனைத் திருவடி தொழுது அவ்விடத்தையே தமது நித்ய வாசஸ்தல மாக்கிக்கொண்டு ஈச்வர பட்டர் யமுனைத்துறைவரது திருவடிகளிலே தம்மாலியன்ற திருப்பணிகளைச் செய்து ஸேவித்திருந்தார்.

இருக்கையில், ஒருநாள் மன்னனார் ஈச்வர பட்டர் கனவில் தோன்றி, 'பக்தனே! நீ மீண்டும் வீரநாராயணபுரம் வந்து முன்போல் தொண்டு புரிந்துவா' என்று ஆஜ்ஞாபித்தருளினார். பட்டரும் அவ்வாணையைச் சிரமேற்றாங்கி உடனே யமுனைத் துறைவனிணையடிகளை வணங்கி மன்னனார் ஆணையை வெளியிட்டருளினார். யமுனைத் துறைவரும் தம் அந்தரங்கரான ஈச்வர பட்டருக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

ஈச்வர பட்டாழ்வார் தமது திருக் குமாரருடன் புறப்பட்டு வாராணஸி வழியாக வெழுந்தருளி ஸ்ரீ புருஷோத்தமம், ஸிம்ஹாத்ரி, அஹோபிலம், திருவேங்கடம், கடிகாசலம், புட்குழி, கச்சி, திருவயிந்திரபுரம், திருக்கோவலூர், திருவரங்கம், திருக்குடந்தை முதலிய தலங்களைத் தர்சித்துக்கொண்டு வீரநாராயணபுரம் போய்ச் சேர்ந்தார். வீரநாராயண புரத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் தம்மை எதிர் கொள்ளச் சென்று ஈச்வர பட்டர் தம்மை அந் நகரத்தார் சூழ்ந்துவர மன்னனார் கோயிலுக்குச் சென்று மன்னனாரைத் திருவடி தொழுது அதிப்ரீதராய் நின்றார். மன்னனார் ஈச்வர பட்டரைக் கடாக்ஷித்து அங்குள்ள வைணவர்களை நோக்கி, 'நீங்கள் இவர்களை ஆதரிப்பீர்களாக' என்று நியமித்தருளினார். அங்ஙனமே அவர்கள் நிர்மித்துக் கொடுத்த திருமாளிகையில் வஸித்துக் கொண்டு மன்னனாருக்குத் திருநந்தவனம் செய்து திருமாலை கட்டிச் சாத்தித் தினந்தோறும் ஸேவித்துக் கொண்டிருந்தார்.

---

2. சடகோபரருளால் திருவாய்மொழி யறிதல்

இப்படி யிருக்கையில் ஒருநாள் மேல்நாட்டி னின்றும் சில வைஷ்ணவர்கள் வீரநாராயணபுரம் வந்து மன்னனாரை ஸேவித்து, 'ஆராவமுதே' என்னுந் திருவாய் மொழியை அநுஸந்தித்து நிற்கையில் ஈச்வர பட்டர் திருக்குமாரரான நாதமுனிகள் 'ஆயிரத்துள் இப்பத்தும்' என்னும் பகுதியைக் கேட்ட மாத்திரத்தில் ஆச்சர்ய மடைந்து அவர்களை நோக்கி, 'இப்ரபந்தம் முழுவதையும் நீவிர் அறிவீர்கொல்?' என்று வினவியருளினர். வைஷ்ணவர்கள் நாதமுனிகளைப் பார்த்து, 'ஆராவமுதே என்னும் பதிகம் மட்டுமே நாங்கள் அறிவோம். மீதி யறியோம்' என்று விடை பகர்ந்தனர். நாதமுனிகள் அவ் வைஷ்ணவர்களை முறைப்படி உபசரித்து மன்னனாருடைய ப்ரஸாதமும் தீர்த்தமும் அவர்களுக்கு அளித்து அனுப்பிய பின், 'ஆழ்வார் அவதார ஸ்தலமாகிய திருக்குருகூருக்குச் சென்று விசாரித்தால் திருவாய் மொழி முழுதும் எளிதிற் பெறலாம்' என்று நிச்சயித்துத் திருநகரிக்குப் புறப்பட்டார்.

திருநகரி சென்ற நாதமுனிகள் ஆழ்வாரையும் பொலிந்து நின்ற பிரானையும் ஸேவித்து அங்கே ஸ்ரீ மதுரகவிகளுடைய சிஷ்யரான ஸ்ரீ பராங்குச தாஸரைக் கண்டு அவரை வணங்கி, 'இவ்விடத்தில் திருவாய் மொழி கற்றார் உண்டோ? ப்ரபந்தம் கிடைக்குமோ?' என்று விசாரித்தார். ஸ்ரீ பராங்குசதாஸர் நாதமுனிகளை நோக்கி, 'ஸ்வாமீ! திருவாய் மொழியும் மற்றைய ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளும் வழக்கொழிந்து சிதைந்துபோய் வெகு நாட்களாயின.

அவற்றைக் கற்பாரும் ஆதரிப்பாருமில்லாமல் இருந்த விடந் தெரியாது மறைந்து போயின. மதுரகவிகள் அடியேனுக்கு 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் ப்ரபந்தத்தை உபதேசித்து ஆழ்வார் திருமுன்பே ஏகாஸநத்திலே யிருந்து மனத்தை ஒரேவழியில் நிறுத்தி ஆழ்வார் திருவடிகளை த்யானித்துக்கொண்டு நியமத்துடன் பன்னீராயிரம் உரு அநுஸந்திப்போர்க்கு ஆழ்வார் ஸேவைஸாதிப்பர் என்று அருளிச் செய்தார்' என்று கூறினர். உடனே நாதமுனிகள் ஸ்ரீ பராங்குசதாஸர் திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பித்து விநயத்துடன், 'அடியேனுக்கு அந்தத் திவ்ய ப்ரபந்தத்தைப் பிரஸாதித் தருளவேண்டும்' என்று ப்ரார்த்திக்க, பராங்குசதாஸரும் மிகவும் உகப்புடனே நாதமுனிகளுக்கு அந்தத் திவ்ய ப்ரபந்தத்தை ஓதுவித் தருளினர்.

நாதமுனிகளும் அதிஸந்துஷ்டராய்த் தம்மாசிரியரை வழிபட்டுத் திருப்புளியாழ்வாரடியிலே ஆழ்வார் திருமுன்பே ஏகாக்ர சித்தராய்ப் பன்னீராயிரம் உரு 'கண்ணிநுண் சிறுத்தாம்பை' நியமத்தோடே அநுஸந்தித்தார். சடகோபரும் சிஷ்யர்க்குரிய எல்லாக் குணங்களையும் பரிபூர்ணமாகவுடைய நாதமுனிகள் பக்கல் கடாக்ஷித்து அசரீரியைப் போல், 'எம்மிட மிருந்து நீர் வேண்டுவதியாது?' என்று வினவினர். நாதமுனிகளும், 'ஸ்வாமீ! அடியேனுக்குத் திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களை உபதேசித் தருளவேணும்' என்று விண்ணப்பஞ் செய்தார். சடகோபரும் அவரது ப்ரார்த்தனைக் கிணங்கி அவருக்கு ஞானக்கண் ணுண்டாகும்படி அருள்புரிந்து ரஹஸ்ய

த்ரயத்தையும், திருவாய் மொழியையும், மற்று முள்ள மூவாயிர ப்ரபந்தங்களையும், அகில தர்சன தாத்பர்யங்களையும், அஷ்டாங்க யோக ரஹஸ்யத்தையும் உபதேசித் தருளினார். நாதமுனிகளும், 'பிறவிப் பிணியின் விடுபட்டுய்ந்தேன்! என் ஜன்மம் ஸபலமாயிற்று' என்று உள்ளங் களித்து பொலிந்து நின்ற பிரானையும் ஆழ்வாரையும் ஸேவித்திருக்கையில் மன்னனார் ஒருநாள் நாதமுனிகள் கனவில் தோன்றி, 'அன்பனே, வீரநாராயணபுரம் வந்து என் முன்னிலையில் திருவாய் மொழியை ஒருதரம் அநுஸந்தானம் செய்வாயாக' என்று ஆஜ்ஞாபித் தருளினார். நாதமுனிகளும் மன்னனார் ஆணையைச் சிரமேல் தாங்கி பொலிந்து நின்ற பிரானையும் ஆழ்வாரையும் வணங்கி அவரிடம் விடை பெற்றுக்கொண்டு வீரநாராயண புரத்துக் கெழுந்தருளினார்.

---

3. தேவகானத்தின் பெருமை யறிவித்தல்

நாதமுனிகள் வீரநாராயணபுரம் வந்து மன்னனாரைத் திருவடிதொழுது நின்று தம்மை ஆழ்வார் விசேஷ கடாக்ஷம்பண்ணித் திவ்ய ப்ரபந்தங்களைத் தமக்கு உபதேசித்த வரலாற்றினை மன்னனாருக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டார். மன்னனாரும் மிகவும் உகப்புடனே நாதமுனிகளை நோக்கி, 'நாம் ஸம்ஸாரிகளுக்கு சாஸ்த்ரங்களைக் கொடுத்தோம். நாமே வந்து பிறந்தோம். எனினும், அவர்கள் திருந்தாமல் பாபத்தில் மூழ்கியிருக்கையில் இப்ரபந்தங்களே அவர்களை நல்வழியில் புகுத்தி உய்வித்தன.

ஆகையால் இவ் வருநூல் சிதையாவழியை நாம் நாட வேண்டும். ஆகையின் நீர் இவற்றை இயலும் இசையும் இயையத்தொகுப்பீராக' என்று அர்ச்சகமுகேன நியமித்தருளினர்.

அவ்வாணையைத்தாங்கி நாதமுநிகளும் தம்முடைய மருமக்களான கீழையகத்தாழ்வாரையும் மேலையகத்தாழ்வாரையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீ வேதவ்யாஸபகவான் வேதங்களை ஸ்வரங்களுக்குத் தக்கபடி சாகைகளாகப் பிரித்து உச்சரிப்பதற்கு அநுகூலம் புரிந்ததுபோலவே திவ்யப்ரபந்தங்களை திவ்யகானத்திலே யடைத்து இயலு மிசையுமாக்கிப் பாடுவித்தருள அவை உலகத்தில் எங்கும்பரவி ப்ரஸித்திபெற்றன.

நிற்க, கங்கைகொண்ட சோழபுரத்திலே இரண்டு வாரஸ்திரீகள் தத்தம் திறமையைப்பற்றி வழக்கிட்டு சோழன் அரண்மனையைக் குறுகினர். அவ் விருவருள் ஒருத்தி தேவகானத்தில் வல்லவள்; மற்றவள் மநுஷ்யகானம் பாடுதலில் பேர்பெற்றிருந்தாள். அரசன் அவர்களது விவாதத்தைக்கேட்டு இருவரிற் சிறந்தவளின்னள் என்று அறிந்துரைத்தற்பொருட்டு ஸங்கீதசாஸ்த்ரம்வல்ல கலைஞர்களிற் பலரை தன் ஸமுஹத்திற்கு வரவழைத்தான். அங்குவந்து குழுமிய வித்வான்கள் அவ் விருவர் திறமையைப் பரீக்ஷிக்கத் தொடங்கி அவ் விருவரையும் பாடக் கட்டளை யிட்டனர். முடிவில் மநுஷ்யகானம் பாடுபவளையே அவர்கள் கொண்டாடி ஸன்மானித்து தேவகானம்பாடியவளை அவமதித்து அனுப்பிவிட்டனர்.

பின்னர், தேவகானம் பாடுதலில் வல்ல அப் பெண்மணி அவ்விடம்விட்டு நீங்கிப் புறப்பட்டு திவ்ய தேசங்கள்தோறுஞ்சென்று ஆங்காங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் எம்பெருமான்கள் முன்னிலையில்பாடிக் காலங்கழித்து வருவாளாயினள். ஒருநாள் அவள் வீரநாராயணபுரஞ் சென்று மன்னனார்முன் தானறிந்த பாட்டுக்களைப் பாட அங்கிருந்த நாதமுனிகள் அவற்றைக்கேட்டு அவளது திறமையை வியந்துகொண்டாடி அவளுக்கு ஸந்நிதி ப்ரஸாதமும் பரியட்டமும் அளித்தனுப்பினார்.

தேவகானம்பாடும் அந்தப்பெண் நாதமுனிகளின் அநுக்ரஹம்பெற்று மனமுவந்து சோழமன்னன்வாழும் நகர்நோக்கி விரைந்துசென்றாள். அவள் சோழனைக்கண்டு வணங்கி, "அரசே, தங்கள் ஸபையினின்றும் அவமதித்துத் தள்ளப்பட்ட நான் அதுமுதல் ஊரூராய்த்திரிந்து நானறிந்த பாட்டுக்களைப் பாடிவர வீரநாராயண புரத்திலே யுள்ள மறையவரொருவர் என் கானத்தைக் கேட்டுப் பேருவகை கொண்டனர். அப்பாகவ தோத்தமர் மன்னனார்க்குத் திருத்தொண்டு செய்து வருகிறார். நாதமுனிகள் என்னுந் திருநாமமுடைய அப்பெரியவரை அழைத்துக் கேட்டால் அவர் என் பாட்டுக்களின் பெருமையை அறிவிப்பார்" என்று விண்ணப்பித்துக் கொண்டாள்.

அதைக் கேட்டு அரசனும் அவள் விரும்பியபடியே நாதமுனிகளை வரவழைத்து அவரைத் தகுந்தபடி உபசரித்து அவரை நோக்கி, "ஸ்வாமீ! தேவரீர் இம்மாதின் கானத்தில் என்ன பெருமை கண்டு

அதைச் சிலாகித்துப் புகழ்ந்தீர்?'' என்று வினவினான். நாதமுனிகளும் அரசனை நோக்கி, "மன்ன! அக் கானத்தின் மஹிமையை உலகோரறியார்கள். அவள் பாடியது தேவகான மாகையின் அவ்விசை நுணுக்கத் தையும் மஹிமையையும் அமரரே அறிவர். திருவாய் மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்களையும் திவ்ய தேவ கானத்திலே இட்டுத் தொகுத்ததும் இது பற்றியே'' என்று அருளிச் செய்தார். அரசன் அவருடைய ப்ரபாவத்தைக் கேட்டு அதிசயித் திருக்கையில் நாத முனிகள் அங்குள்ள ராஜ மநுஷ்யரை ஏவி நாலாயிரம் தாளங்கள் கொண்டு வரும்படி செய்தார். நாலாயிரம் பேத த்வநிகளுள்ள அத்தாளங்களை ஒருங்கே சேர்த்துச் சப்திக்கும்படி கட்டளையிட்டு அங்ஙன மெழுந்த வொலியைக் கொண்டு அத்தாளங் களின் நிறைகளை யெளிதில் அறிந்தவராய் அரசனை யும் மற்றையோரையும் நோக்கி, "இது இத்தனை நிறை; இது இத்தனை நிறை'' என்று அத்தாளங் களெல்லாவற்றின் நிறையையும் வெளியிட்டார். அர சனும் அவர் கூற்று ஸரியோ வென்று அறிதற் பொரு ட்டுத் தனித்தனியே அத்தாளங்களை நிறுத்துப் பார்த்து அவையாவும் நாதமுனிகள் கூறிய நிறைக்கு முந்திரை கூட ஏறுமலுங் குறையாமலும் இருந்ததைக் கண்டு மிகவும் ஆச்சர்யப்பட்டு அவருடைய திருவடி களில் தண்டன் ஸமர்ப்பித்து நின்று அவருக்கு அள விறந்த பொன்னும் மணியும் வழங்கிப் பெருமைப் படுத்த வெண்ணினான். நாதமுனிகளோ பொன்னைத் துரும்பாக மதித்த துறவியாதலின் அவற்றைப் பெறுமல் அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு வீர நாராயணபுரத்துக் கெழுந்தருளி எப்போதும்போல்

மன்னனார் திருவடிகளில் கைங்கர்யம் புரிந்து வாழ்ந்திருந்தார்.

---

4. நாதமுனிகளின் ப்ரதாபம்

நாதமுனிகளின் சிறப்பைக் கேட்டு மிகவுமுவந்து சிலர் அவரையே தஞ்சமென்றடைந்து, "ஸ்வாமீ! தேவரீரது திருவடிகளை ஆச்ரயித்த எங்களை க்ருதார்த்தராக்க வேண்டும்" என்று குறையிரந்து நிற்கையில் முனிகளும் அவ் வெண்மரையும் குளிர நோக்கியருளி அவர்களைப் பஞ்ச ஸம்ஸ்கார பூர்வமாக ஆட்கொண்டு, த்வயார்த்தத்தையும், ஸ்ரீ புருஷ நிர்ணயத்தையும், ந்யாஸ தத்வத்தையும் அருளிச்செய்து வேத சாஸ்த்ரங்களையும் திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களையும் ஓதுவித்தார். வெள்ளத் தரவணை மேல் துயிலமர்ந்தவித்தினை உள்ளத்தே கொண்டு நாதமுனிகள் யோகத்திலே இருந்து பகவதநுபவஞ் செய்துகொண்டிருந்தார்.

அரசன் ஸ்ரீமந் நாதமுனிகளின் யோக மஹிமையைக்கேள்வியுற்றுத் தன் பட்டமஹிஷிகளுடன் புறப்பட்டு வீரநாராயணபுரம் வந்து மன்னனார் ஸந்நிதிக்குச் சென்று வணங்கி ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு முறைப்படி செய்ய வேண்டிய மர்யாதைகளைச் செய்து முடித்தான். ஸ்ரீமந் நாதமுனிகள் அரசனையும் அவனது தேவிமாரையுங் கண்டு, 'க்ருஷ்ண பரமாத்மா கோபியருடன் எழுந்தருள்வதற்கு என்ன தபம் செய்தேனே! என் பாக்யமே பாக்யம்' என்று கருத்திற் கொண்டு களித்து அவர்கள் வீரநாராயணபுரம் நீங்கிச் செல்கையில் அவர்களைத் தொடர்ந்து சென்

ளூர். இவர் பித்தரோ வெனப் பிறர் ஐயுறுமாறு சோழனைப் பற்றிச் சென்ற முநிகளை அவரது சிஷ்யர்கள் நோக்கி, "ஸ்வாமீ, தேவரீரும் இப்படிச் செய்வதுண்டோ?" என்று விண்ணப்பித்துக் கொண்டனர். திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டதாகப் பூரிக்கும் முநிகளின் மனப்பான்மையை யறியாத சிஷ்யர்களை நோக்கி, 'க்ருஷ்ணன் தன் கோபியருடன் செல்கையில் நான் அவரை விட்டேகுவதும் பொருந்துமோ?' என்று விடை பகர்ந்து பின் அவரது வேண்டுகோட் கிணங்கி வீரநாராயண புரத்திற்கே மீண்டெழுந் தருளினர்.

நாதமுநிகள் வெகுகாலம் யோக நிஷ்டையில் எழுந்தருளியிருந்து தமது அந்தரங்கரான குருகை காவலப்பனுக்கு யோக முறையைக் கற்பித்து யோகத்தைக் கைக்கொள்ளும்படி ஆஜ்ஞாபித்தார். உய்யக் கொண்டாரை அழைத்து, 'நீர் திருவாய் மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்களைக் கொண்டு உலகத்தாரை மேன்மையுறச் செய்யும்' என்று அருளிச் செய்து தமது புத்ரராகிய ஈச்வர முநிகளைப் பார்த்து, 'உமக்கு ஒரு குமாரர் அவதரிப்பார். அவருக்கு யமுனைத் துறைவர் என்று திருநாமம் சாத்தி நீவிர் எம்மிடம் கற்றுள்ள தர்சந தாத்பர்யங்களையும் யோக ரஹஸ்யார்த்த விசேஷங்களையும் அவருக்கு உபதேசிப்பீராக' என்று நியமித்து முன்போலவே யோகத்தில் எழுந்தருளி யிருந்தார்.

அப்பால் ஒருநாள் சோழ ராஜன் வேட்டையாடி வீரநாராயணபுர மார்க்கமாய் மீண்டு திரும்பி நாதமுநிகளின் திருமாளிகைக்கு வந்து அவரைப்பற்றி

வினவிச் சென்றான். நாதமுனிகள் க்ரஹத்திற்கு வந்ததும் அகத்திலுள்ளோர் அவரை நோக்கி, 'ஸ்வாமீ! தேவரீர் இல்லாத சமயத்தில் இரண்டு வில்லிகளும் ஒரு பெண் பிள்ளையும் குரங் கொன்றைக் கூட்டிக் கொண்டு வந்து நாதமுனிக ளெங்கே? என்று வினவிச் சென்றார்கள்' என்று கூறினார்கள். உடனே முனிகளும் பெருமாளும் பிராட்டியும் இளைய பெருமாளும் வாயுபுத்ரனுமே வந்தவர்களா யிருத்தல் வேண்டுமென்று ஊஹித்தறிந்து அவர்களைத் தேடிக் கொண்டு புறப்பட்டார். வழியில் எதிர்ப்பட்ட பலரையும் வினவிக் கொண்டே எவ்வளவு தூரம் சென்றும் முன்சென்றவரைக் காணமல் ஏங்கினர். தமது முயற்சியிற் சலியாது அதே வ்யாஜமாக நெடுந்தூரம் நடந்து சோழனது கங்கைகொண்டபுரம் வரை வந்து சேர்ந்தார். தொலை வழிநடந்த இளைப்பினல் சோர் வடைந்து முனிகள் மூர்ச்சித்துக் கீழேவிழுந்து தன் ப்ராணனை நீத்தார்.

இச் செய்தியை உய்யக்கொண்டார், குருகை காவலப்பன், ஈச்வர முனிகள் முதலானோர் கேட்டு வ்யாகுலமடைந்து சோழபுரம் சென்று ஸ்ரீமந் நாத முனிகளின் விமலசரம விக்ரஹத்தை ஸேவித்துத் தங்கள் கண்ணிலும் நெஞ்சிலும் தேக்கிக்கொண்டு சோகத்தால் துடித்துத் தங்களிலே தேறித் தரித்து நின்று பின் சரம கைங்கர்யத்தை ஈச்வர முனிகளின் திருக் கைகளாலே செய்வித்து பின் வீரநாராயணபுரத்திற் குச் சென்று மற்றுஞ் செய்யவேண்டிய க்ருத்யங்க ளெல்லாம் செய்வித்தார்கள்.

ஆளவந்தார் வைபவம்

1. திருவவதாரமும் இளமைப் பருவமும்

மணக்கால் நம்பி ஈச்வர முநிகளுடன் தர்சனங்களை நிர்வஹித்து வருகையில் ஈச்வர முநிகளுக்கு ஆடி மாஸத்திலே உத்ராட நக்ஷத்ரத்திலே ஒரு குமாரர் திருவவதரித்தருளினார். மணக்கால் நம்பியும் அச்சுப நிகழ்ச்சியைக் கேட்டுக் களிப்பு மிகுந்தவராய் ஈச்வர முநிகளைக் கொண்டு ஜாதகர்மத்தைச் செய்து முடிப்பித்துப் பன்னிரண்டாவது நாளில் ஸ்ரீமந் நாதமுநிகளின் நியமனப்படியே அச் சுந்தர வடிவழகர்க்கு யமுனைத் துறைவர் என்று திருநாமத்தைச் சாத்தி அக் குமாரரை ப்ரீதியுடன் வளர்த்து வருவாராயினர்.

பிறகு ஈச்வர முநிகள் யமுனைத் துறைவருக்கு அந்நப்ராசந சௌளோபநயநாதிகளையும் அவ்வவற்றுக்குரிய காலங்களிலே செய்தருளி, வேதம் முதலிய எல்லா சாஸ்திரங்களையும் கற்பிக்கவெண்ணி அவரை ஓராசிரியரிடம் விடுத்தனர். யமுனைத் துறைவர் குசாக்ர புத்தி யுடையவர். ஒருகாற் கேட்டதே அவரது மனத்தில் நிலைபெறப் பதிந்துவிடும். அவரது நுட்ப வறிவினையும் ஞாபக சக்தியையும் வியந்து கொண்டாடாதோர் ஒருவரு மிலர். அதிமேதாவியாய் விளங்கிய யமுனைத் துறைவருக்கு ஸமமாக ஓதி விஷயங்களைக் கருத்தில் நிறுத்துவது அவருடன் படித்த மற்றையோர்க் கியலாதுபோயிற்று. இங்ஙனம் தம்முடன் படித்துவந்த மாணவர் பலரையும் விஞ்சி நின்ற யமுனைத் துறைவன் தன் தோழருடன் ஓதியதையே மீண்டும் மீண்டும் ஓத மனமிலாராய்ப் பாடசாலைக்கே வராமல் அடிக்கடி நின்றுவிடுவார். ஆசிரி

யர் அவரைத் தண்டிக்க முற்பட்டால் யாமுனர்யர் பிறர் பலமுறை படித்தும் கற்றுச் சொல்லாத பாடங்களை ஒரு முறை கேட்டதிலிருந்தே கேட்போர் வியப்புறச் சொல்லி முடித்துத் தம் மாசிரியர் மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்ரரானார். யமுனைத் துறைவர் வேதங்களை அங்கோபாங்கங்களோடே பதக்ரம ஸஹிதமாக அத்யயனம் பண்ணி முடித்தபின் விவாஹமுஞ் செய்துகொண்டார்.

---

2. ஆக்கியாழ்வானின் அஹங்கதையை அகற்றல்

யமுனைத் துறைவர் மஹாபாஷ்ய பட்டரென்னும் தம்மாசிரியரிடம் கல்விபயின்று வருகையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழராஜனது ஸம்ஸ்தானத்தில் ஆக்கியாழ்வா ரென்று ப்ரஸித்தி பெற்ற ஓராஸ்தான வித்வான் விளங்கி வந்தார். ஆக்கியாழ்வான் ஆஸ்தான வித்வானுகையின் செருக்குற்று நாட்டிலுள்ள மற்ற பண்டிதர்களிட மிருந்து தசபந்த மிறுத்து வந்ததுமன்றி யாவரையும் சிறுமைப்படுத்தி வந்தார்.

ஒருநாள் மஹாபாஷ்ய பட்டர் வெளியே கார்யார்த்தமாய்ச் சென்றிருக்கையில் ஆக்கியாழ்வான் விடுத்த ஸேவகனொருவன் அவரைத் தேடிக் கொண்டு வந்தான். அங்குக் குழுமியிருந்த மாணவர்களில் யமுனைத் துறைவர் துடுக்குடன் கிளம்பி அச் சேவகனை நோக்கி, ‘ஆக்கியாழ்வான் உம்மை எமதாசிரியரிடம் என்ன வேலையாய் அனுப்பினர்?’ என்று வினவினர். ஸேவகனும் அவரை நோக்கி, ‘வழக்கம்

போல் இவ் வர்ஷமும் தமக்குச் சேர வேண்டிய பகுதிப் பணத்தை மஹாபாஷ்ய ப்ட்டரிடம் பெற்று வருமாறு எம்மை ஈண்டு அனுப்பினார்' என்று கூறினன். உடனே யாமுநார்யர் அவனைப் பார்த்து, "கப்பங் கட்டுவதில்லை யென்று உனது யஜமானர்க்கு அறிவித்து விடு" என்று கூறி அவனை அனுப்பி விட்டார்.

மஹாபாஷ்ய பட்டர் தமதில்லம் வந்தடைந்ததும் நடந்ததை யறிந்து வ்யஸனத்தில் ஆழ்ந்து, 'இச் சிறுவன் அறியாமையாற் செய்த அடாத செய்கையால் நாம் அல்லலுற லாயிற்றே! பகுதிப் பணங் கட்டினாலும் ஆக்கியாழ்வானது கோபத்தினின்றும் தப்புவது எப்படி? பணத்தைக் கட்டி அவனது காலில் விழுந்து மன்னிப்புப் பெறுவ தென்றாலும் கையிற் காசில்லையே! என்செய்வேன்!' என்று தபித்து அஞ்சிக் கிடந்தார். யமுனைத் துறைவர் தம்மாசிரியரைத் தேற்றி சாந்தப்படுத்தி யிருக்கையில் ஆக்கியாழ்வான் அனுப்பிய கிங்கரன் வந்து, 'உமது சிஷ்யருள் ஒருவர் உதாஸீனமாய் இழித்துக் கூறிய உரையினைக் கேட்டு ஆக்கியாழ்வான் கடுஞ் சினங்கொண்டு உம்மைத் தண்டிக்க விரும்பி வாதுக் கழைக்கின்றார். பெரியோரிடம் பிழைத்து நடப்பதா லுண்டாகும் இன்னல் இன்ன தென்று அவர் உமக்கு அறிவிப்பார்' என்று கூறினன்.

யமுனைத் துறைவர் அவனைப் பொருட்படுத்தாமலே வட மொழியிற் கவியொன் றெழுதி அவனிடங் கொடுத் தனுப்பினார். ஆக்கியாழ்வானும் அதைப் பார்த்து 'என்ன ஆச்சர்யம்! இப்படியும் ஒரு கவி

யுண்டோ? இனி அவனைச் சும்மா விடக் கூடாது' என்றதிசயித்துத் தீர்மானித்துச் சோழனிடம் இவ் விஷயத்தை அறிவித்தான். மன்னவனும் தன் ஸேவகரை விளித்து யமுனைத் துறைவரைக் கையும் பிடியுமாய் ராஜ ஸமுஹத்திற்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டனுப்பினன். யமுனைத் துறைவர் ராஜ சாஸநத்தை மதியாமலே வந்த வேலைக் காரரைத் திருப்பிச் சோழனிடமே அனுப்பிவிட்டார்.

சோழ பூபதி, 'இவர் வயதிற் சிறியவ ரேனும் ஞான சீலங்களிற் பெரியவர் போலும். நமது சாஸநத்தை அவமதித்த இவ் விளைஞர் ஸாமான்யரல்லர்' என்று நினைத்து முத்துச் சிவிகையில் அவரை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவரும்படி கட்டளை யிட்டு ராஜ வுத்யோகஸ்தரை அவர் பால் விடுத்தனன். யமுனைத் துறைவர் அரசனது வேண்டுகோட் கிணங்கி சிவிகை யேறிப் புறப்பட்டு மன்னன் கொலுவிற்குச் சென்றனர்.

சோழனும் யமுனைத் துறைவரை உபசரித்துக் கொண்டாடி வரவேற்றான். அரசன் தமக்குச் செய்த மர்யாதைகளைப் பெற்று ஓராஸனத்தில் வீற்றிருந்தார். அவருக் கெதிரில் ஆக்கியாழ்வான் உட்கார்ந் திருந்தார். அரசன் தன் தேவியுடன் ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்திருந்தான். அவர்களைச் சூழ பல வித்வான்கள் வந்து குழுமியிருந்தனர். 'சிறுவன் தன் அறியாமையால் இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டான். அவன் தப்புவது எங்ஙனம்?' என்று அங்குள்ளோர் அதிசயித்து நின்றனர்.

அரசனுடைய அநுமதியின்மேல் யமுனைத் துறைவர்க்கும் ஆக்கியாழ்வானுக்கும் வாதம் தொடங்கியது. யமுனைத் துறைவர் ச்லோக மொன்றை யெழுதி ஆழ்வானுக் களிக்க அவன் அதைக் கண்டு வெகுண்டு, 'சிறுவ! உன் நிலை யறியாது துள்ளுகின்றனை. உன் துடுக்கை ஒரு நொடியில் அடக்குகிறேன். என்னுடன் தர்க்கித்து வெல்லுந் திறம் உனக்குண்டோ பார்ப்போம்' என்று சொல்லிச் சீறினன்.

யமுனைத் துறைவருடைய மந்தஹாஸமான பார்வையையும், முகப்பொலிவையும், கூர் மதியையுங் கவனித்த மஹிஷி யானவள் தன் நாயகனை நோக்கி, 'இவ் விருவர்க்கும் நிகழும் வாதத்தில் யமுனைத் துறைவரே வெற்றி பெறுவா ரென்பது திண்ணம். ஆக்கியாழ்வான் அவரிடம் தோல்வியே யடைவார்' என்று தன் அபிப்ராயத்தை வெளியிட்டாள். சோழன் அவளது உரையை மறுத்து, 'இந் நாட்டில் நமது வித்வானை வெல்வாரும் உளரோ? இச் சிறுவன் அவரது பெருமையை அறியாது இளம் பிள்ளைத் தனத்தால் ஈண்டு வந்து தோன்றியுள்ளான். அவன் ஆக்கியாழ்வானிடம் தோல்வியடைந்து அவமானமடைவான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை' என்று கூறினன். உடனே அரசி சோழனை நோக்கி, 'சிறுவர் தோல்வி யடைந்தால் நான் நாய்க் கெரித்திடக் கடவேன்' என்றோர் கடுஞ் சபதம் செய்துகொண்டாள். அரசனும் தன் பட்டமஹிஷியைப் பார்த்து, 'நீ கூறுவதுபோல் யமுனைத் துறைவர் வெற்றி பெற்றால் அவருக்கு என் ராஜ்யத்திற் பாதி யளித்

துக் கௌரவப் படுத்துவேன். ஆயினும் அது ஒரு காலும் நடவாத கார்யம்' என்று கூறினான்.

யமுனைத் துறைவரை ஆக்கியாழ்வான் நோக்கி, 'பிள்ளாய்! ஒரு க்ஷணத்தில் என் பெருமையையறியப் போகிறாய். உலக வழக்குக்குப் பொருந்தியவற்றை மறுக்கவும் பொருந்தாதனவற்றை உண்டென்று ஸாதிக்கவும் என்னால் கூடும். நீ அன்றென்பதை உண்டென்பேன். நீ ஆமென்பதை அன்றென்பேன். என் யுக்தி சாதுர்யங்களால் உன்னைத் தோற்கடித்து உன் தலையில் அடிப்பேன். நான் தோற்றால் அதே தண்டனைக்கு உட்படுவேன்' என்று கூறினான்.

யமுனைத் துறைவர் அவனது கருத்துக் கிசைந்து அவனை நோக்கி, 'த்வம்மாதா வந்த்யா, ராஜா ஸார்வ பௌம:, ராஜபத்நீ பதிவ்ரதா' என்னும் இம் மூன்று வாக்யங்களிலு முள்ள உண்மையை மறுத்து உமது திறமையைக் காட்டும்' என்று உரைத்தார்.

என் செய்வான்! பாபம்! இவ் வாக்யங்களுள் ஒன்றையேனும் மறுத்தற் கூடுமோ? முதல் வாக்யத்தை மறுப்பதானால் அவன் பண்டிதர் நிறைந்த அச் சபையிலுள்ளோர் யாவராலும் அவமதிப் புற்று அவமான மடைய வேண்டிவரும். தாயைப் பழிப்புரைக்குத் தப்புவிப்பதன்றோ புத்ரர் கடமை? அப்படி யிருக்க, யாவரு மறிய தன் தாயினைப் பழித்து மேம்படுத லுலகி லுண்டோ?

இளைஞர் கூறிய இரண்டாம் வாக்யத்தை மறுத்தேனும் வெற்றி கொள்ளலாமோ வென்று ஆக்கியாழ்

வான் நெடுநேரம் ஆலோசனை செய்தான். தன்னுற் கூடுமட்டும் முயன்றும் சிறுவனைத் தோல்வியடையச் செய்தல் அவனுக்கு அரிதாயிற்று. 'அரசன் ஸார்வ பௌமனல்லன் என்று சொல்ல அவன் துணியவில்லை. அரசவையில் அவன் முன்னிலையில் அவனைத் தாழ்த்திக் கூறின் அதனுல் அரசனது கடுஞ் சினத்துக்குள்ளாக வேண்டும். துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலகனை அம் மன்னர் மன்னனுக்குப் பல சிற்றரசர் ஸேவகஞ் செய்து காத்துக் கிடக்க அவனது பெருமையை இல்லையென்று எங்ஙனங் கூறுவது? அவன் சோத்தைத் தின்று அவன் மனம்நோவ இழித்துரைத்தல் நன்றியற்ற செய்கையன்றோ? அரசரைப் பிழைத்தோர் படுந்துன்பங்களுக் களவுமுண்டோ?' என்று எண்ணுத தெல்லாம் எண்ணிப் பரிதபித்தான்.

மூன்ருவது வாக்யத்தை மறுத்தலும் அரிதன்றோ? 'கற்புக்கரசியாகிய அரசன் மனைவியின் குணத்தைப் பழித்தால் உலகம் தன்னைச் சிரியாதோ? அணுவுமஞ்சும் நடத்தையினை யுடையாளை எங்ஙனம் நாகூசாமல் இகழ்வது? பண்டிதன் மனமும் சிந்தையும் பதறிக் கலக்கமுற்றன. தன் அறியாமையை நினைத்து நெட்டுயிர்த்தான். நாம் யானையெனக் களித்துச் செருக்குற்றிருக்கையில் சிங்கக் குட்டிபோன்ற பராக்ரமசாலியாகிய இவன் எங்கிருந்து முளைத்தான்? நமது தலைவிதி இருந்தவாறென்னே! மஹா பண்டிதர்களெல்லாரும் நம்முன் நிற்க முடியாமல் நமது பெருமையை வியந்து நம்மை வாழ்த்தி வாழ்ந்து வருகின்றனரே! இச் சிறுபயலின் முன் என் நாவலியழிந்தும் மதி மழுங்கியும் போகலாயிற்றே! என்

செய்வேன்! என் மமதையால் நான் அழிவுற்றேன் என்று பலவாறு துக்கித்துச் சோர்வுற்றுக் கிடந்தான்.

ஆக்கியாழ்வானின் எளிய நிலையினைக் கண்ட அரசன் மனைவி தான் முதலிற் கருதியபடியே அவன் தோல்வியுற்றமையை நினைந்து உள்ளங் களித்து ஆநந்தக் கண்ணீர் பெருக்கி ரோமம் புளகித்து யமுனைத் துறைவரை ஆதரவுடன் தழுவிக்கொண்டு, 'எனது ப்ரதிஜ்ஞையை முடிப்பித்த செல்வரே! நீர் இங்கென்னை ஆளவந்தீரோ?' என்று அவரைக்கொண்டாடிக் கௌரவித்தாள். அன்று முதல் யமுனைத் துறைவர்க்கு 'ஆளவந்தார்' என்ற திருநாமமே வழங்கி வந்தது.

ஆக்கியாழ்வான் தன் கர்வமொழிந்து ஆளவந்தாரின் திருவடிகளில் விழுந்து பணிந்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டு தான் பிடித்திருந்த ப்ருதுகளைத் தூரே எறிந்து அவருக்குத் தொண்டனானான்.

இளைஞரின் ப்ரபாவத்தை நேரிற் கண்டதிசயித்த மன்னவன் உள்ளம் மகிழ்ந்து நெக்குருகவும், தன் கரங்கள் சிரமேற் சென்று குவியவும், கண்ணீர் ஆறாய்ப் பெருகவும், தேகம் ரோமாஞ்சங் கொள்ளவும் ஆளவந்தாரின் திருவடிகளில் இறைஞ்சி நின்று வெகுவிநயத்தோடு, 'ஸ்வாமீ! தேவரீரை இளம்பிள்ளையென்று அவமதித்த இப் புல்லறிவினேனை கடைக்கணித்து நோக்கியருள வேண்டும். தேவரீரை இழித்துரைத்த என் கொடிய நாவினை இன்னமுஞ் சேதியாது வாளா நிற்கின்றேனே! தன்னினும் மேம்பட்

டார் ஒருவருமிலரென்று அஹம்பாவங்கொண்டிருந்த ஆக்கியாழ்வானது புன்செருக்கும் இன்றுடன் தொலைந்தது. எங்களைத் தடுத்து ஆட்கொள்வதற்கிங் கெழுந்தருளிய எம் அண்ணலே! யாமாராயாது புரிந்த அபராதத்தைப் பொறுத்தருள வேண்டும்' என்று மிகவும் ப்ரார்த்தித்து நின்றான்.

ஆளவந்தார் கருணை ததும்பும் தமது அலர்ந்த முகத்தால் அங்குள்ளோரைக் கடாக்ஷித்தருளி, 'நான் கூறிய மூன்று வாக்யங்களின் உண்மையை மறை நூன் முடிபுக்கும் அநுபவத்திற்கும் ஒப்ப மறுக்கா விடின் நான் வெற்றி பெற்றவன் ஆகேன். ஆகையின் அவற்றை ஒவ்வொன்றாய் மறுத்து ஆக்கியாழ்வாரை அடக்குவதே முறையாகும்.

நான் கூறிய முதல்வாக்யத்தின்படி அவருடைய தாய் வந்த்யை அல்லள் என்று நிரூபிக்க வேண்டியவனாகிறேன். உலகில் புத்ரவதியான ஸுமங்கலிகளுக்கே மர்யாதையும் கௌரவமும் உண்டு. புத்ரரில்லாத பெண்டிரைக் கேவலமாக நினைத்தல் உலக வழக்கமாயுள்ளது. மேலும், ஒரு பிள்ளை பெற்றவள் ஒரே குலையை ஈனும் வாழைக்கு ஒப்பாவாள். ஆகையால் அவளும் புத்ரவதியாகாள். இவருடைய தாய்க்கு இவர் ஒரே பிள்ளையாகையால் அவள் புத்ரவதியுமாகாள்; வந்த்யையுமல்லள். தனிமரம் தோப்பாகா தன்றோ?

அடுத்தபடி அரசன் ஸார்வ பௌமர் என்ற வாக்யத்தையும் மறுத்துவிடலாம். தர்ம வழியில் நில்லாத அரசன் ஸார்வ பௌமனல்லன். ஆயினும்

அரசனைத் தர்மவானென்று சொல்வதற்கு ஒரு முக்யமான ஆக்ஷேப முண்டு. குடிகள் செய்த பாபம் அரசனைச் சாருமென்று மறை நூல்கள் முழங்குதலால் நமது அரசனும் பாபியென்று சொல்லத் தடையில்லை.

மூன்றாவதாக, நமது மஹிஷி பதிவ்ரதை யல்லள் என்று கூறுவதும் எளிதிலமையும். ஒவ்வொரு ஸ்த்ரீக்கும் விவாஹமாகு முன்னரே தேவர்கள் அவளைக் கொள்கின்றனரெனச் சாஸ்த்ரங்கள் கூறும். கருவின் உற்பத்தி காலத்தில் சந்த்ரனுக்கும், விளையாடும் பர்வத்துக் கந்தர்வனுக்கும், தீபன வ்ருத்தி உண்டாகையில் அக்நிக்கும் உரியவளாய்ப் பின்னரே தனக்கு மாலை யிட்ட கணவனுக்கு உரிமையாகிறாள். அன்றியும் மணவினை நடக்குங் காலத்து ஒரு கன்னிகையை முதலில் பஞ்ச தேவர்க்கும் உரிமையாக்கிப் பின்னரே ஒரிளைஞனிடம் ஒப்புவிக்கிறார்கள். அதனாலன்றோ நாமும் நமது மஹிஷியைப் பதிவ்ரதை அல்லளென்று கூறவேண்டிய தாயிற்று' என்று கூறினார்.

இங்ஙனம் தாம் கேட்ட கேள்விகளுக்குத்தக்கபடி தாமே பதிலளித்ததைக் கேட்ட அரசனுட்பட ஸமஸ்த ஜனங்களும், 'வயதிற் சிறியராகிய இவருக்குள்ள அறிவை என்னென்று வியப்பது! தம் அறிவால் தாம்கூறியவற்றைத்தாமே மறுத்துச் சாதிக்கும் வன்மையைப் பெற்றிருக்கும் இவரை வெல்வது மிகவும் அரிதாகும். இவரிடம் ஆஸ்தான பண்டிதர் தோல்வியுற்றது ஓரதிசயமன்று' என்று வியந்து கொண்டாடினார்கள். அரசனும் தான் முன் சொல்

வியபடியே தனது ராஜ்யத்திற் பாதியை ஆளவந்தாருக்குக் கொடுக்க அவர் அதைப்பெற்றுக் கொண்டு தமது பத்நியுடன் ராஜபோகங்களை அநுபவித்துக் கொண்டிருந்தார்.

3. குருவருட் பேறு

அப்படியிருக்கையில் ஆளவந்தாரது ப்ரதாபங்களைக் கேள்வியுற்ற மணக்கால் நம்பியும் அவரைத் திருத்திப் பணிகொண்டு க்ருதார்த்தராக்கத் திருவுள்ளங்கொண்டு ஆளவந்தார் அரசு செலுத்தும் நகர் நோக்கிப் புறப்பட்டுக் கடுகி நடந்து ராஜ மாளிகையை அடைந்தார். அடைந்தும் அரச ஸமுஹமடைந்து அவரைப் பார்த்துப் பேசும் பாக்யம் கிட்டாமையால் மணக்கால் நம்பி வேறோருபாயம் செய்து ஆளவந்தாரை நேரிற்கண்டு நலமுண்டாக்கினார். அவர் அரச க்ரஹத்திலுள்ள மடைப்பள்ளிக்குச் சென்று அங்குள்ள பரிசாரகரை நோக்கி, "நமது அரசர் விரும்பி அமுது செய்யும் கறியாது?" என்று வினவ அவர்களும், 'ஆளவந்தார்க்குத் தூதுளங் கீரையில் விருப்பமதிகம்' என்று விடைபகர்ந்தனர். உடனே மணக்கால் நம்பியும் மனங்களித்து அன்று முதல் தினந்தோறும் அரசர் உவந்து அமுது செய்வதும், அறிவை வளர்த்துவதுமான தூதுளையை எங்குக் காண்பினும் தேடிக் கொய்து கொணர்ந்து மடைப்பள்ளியில் கொடுத்து வருவாராயினர். அங்ஙனம் அவர் கொணர்ந்த கீரையைப் பதமாகச் சமைத்துப் பரிமாற அதனை உண்டு ஆளவந்தார் களிப்படைவார். இம்மாதிரி மணக்கால் நம்பிகள்

ஆறுமாத காலம் செய்து வந்தும் தம்மைப்பற்றி ஆளவந்தார் ஒரு கேள்வியும் கேட்காதது கண்டு வேறோருபாயத்தால் அவரது பரிசயத்தைப் பெற நிச்சயித்தார்.

அவர் திடீரென்று தூதுளங் கீரை கொய்து கொணர்ந்து கொடுத்தலை நிறுத்தி விட்டார். அன்றையதினம் ஆளவந்தார்க்குக் கீரை பரிமாறப் படவில்லை. உடனே அவர் சமையற் செய்வோரை விளித்து, "இன்று ஏன் தினம்போல் கீரை சமைக்கவில்லை?" என்று வினவ, பாகிகளும், 'தினந்தோறும் கீரை கொண்டு வந்து கொடுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர் இன்றைய தினம் யாது காரணத்தாலோ கொண்டு வரவில்லை' என்று மறுமொழி புகன்றனர். ஆளவந்தார் வியப்புற்று, 'அவர் மீண்டும் இங்கு வரும்போது எமக்கு அறிவியுங்கள்' என்று சொன்னார். இதனையறிந்து மணக்கால் நம்பிகள் மறுநாள் கீரை கொண்டு வந்து கொடுக்க, மடைத் தலைவரும் அவரை அரசஸமுஹத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஆளவந்தார் மணக்கால் நம்பியைப் பார்த்து, "எதை அபேக்ஷித்துத் தினந்தோறும் தூதுளை கொண்டு வந்து கொடுக்கிறீரென்று அறிவித்தால் நான் அக்கார்யத்தைத் தலைக் கட்டி வைப்பதிற்றடையில்லை. நீர் பொன்னையேனும் பூமியையேனும் விரும்பி இதைச் செய்து வந்தால் உமக்கு வேண்டிய தனத்தைக் கொடுக்கும்படி தக்ஷணமே ஆஜ்ஞாபித்து விடுகிறேன். தேவரீர் வேண்டுவதியாது?" என்று அதிப்ரீதியுடன் வினவியருளினர்.

அதைக்கேட்ட மணக்கால் நம்பிகளும் அரசரை நோக்கி, "அரசே! உம்முடைய நலத்தை உத்தேசித்தே நான் உம்மை அடைந்து இதுகாறும் நீர் உகந்த பணிசெய்து வந்தேன். ஆகையால் நான் உம்மிடமிருந்து பெறவேண்டுவது ஒன்றும் இல்லை. உமது பிதாமகரான நாதமுனிகள் பித்ரார் ஜிதமான நிக்ஷேப மொன்றை எம்மிடம் வைத்து அதனைக் காத்துத் தமது திருப்பேரனுரான உமக்குக் கொடுக்கும்படி ஆஜ்ஞாபித்து இவ்வுலகை நீத்தார். அதனை உம்மிடம் முறைப்படி சேர்ப்பிக்கவே நான் உம்முடைய பேட்டிக்காகப் பலநாள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அந்தத் தனமிருக்குமிடத்தை நானறிவேன். அதனை நான் உமக் குரிமையாக்கும் வரையில் நான் தினந்தோறும் உம்மைக் கண்டு செல்லும்படி அநுமதித்து அதற்கு வேண்டிய ஸௌகர்யங்களையும் செய்து கொடுக்க வேண்டு' மென்று கூறினுர்.

அதுமுதல் மணக்கால் நம்பிகள் ஒருவித ச்ரமமுமின்றித் தினந்தோறும் தம்மைக் காணவரும்போது தடையின்றி அவரை உள்ளே விடுமாறு தம் ஏவலாளர்க்குப் பணித்திருந்தார். நம்பிகளும் ப்ரதிதினமும் அரசனிருப்பிடம் வந்து அவருடன் தனித்திருந்து பகவான் அர்ஜுனனுக்கு அருள்புரிந்த கீதையின் செம்மைப் பொருள் தெரியும்படி பதினெட்டு அத்யாயமும் அருளிச் செய்ய, ஆளவந்தாரும் ஆரண ஸாரமான கீதையின் உட்பொருளைக் கேட்டருளி தைவ ஜ்ஞானம் பெற்று ஜகக்காரண பூதனை ஸ்ரீமந் நாராயணனை ஸேவித்து அவனது திருவடிகளில் நிரந்தர கைங்கர்யம் புரியும் பாக்யம் பெறும் நாள் என்று

குறுகுமோ வென்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். மணக்கால் நம்பிகளை நோக்கி, 'அப் பரம் பொருளை ஸாக்ஷாத்கரிக்க உபாயமொன்றை அருளிச் செய்ய வேண்டும்' என்று ப்ரார்த்தித்தனர். மணக்கால் நம்பிகளும் போர வுகந்தருளி ஆளவந்தாரை ஏகாந்தத்தில் அழைத்து அவருக்கு மெய்ம்மைப்பெரு வார்த்தையான சரமச்லோகார்த்தத்தை முறைப்படி அருளிச் செய்தனர். உடனே ஆளவந்தாரின் மனம் பக்வ நிலையடைந்தது. பொல்லாப் புன் செல்வத்தில் மயங்கித்தான் உழல்வதை நினைத்து நினைத்து வருந்தினார். புன்புலால் நிரம்பிய யாக்கையின் நிலையாமையையும், செல்வ நிலையாமையையும் உள்ளபடி அறிந்த ஆளவந்தார், தமது ஆரியரை நோக்கி, "அழிவிற் பெருஞ் செல்வ மாகிய ஆழியரவணையானைக் காண்பதென்றுகொலோ?" என்று கனிந்துருகிய சிந்தையராய் நின்றார்.

உடனே மணக்கால் நம்பியும் ஆளவந்தாரைக் கூட்டிக்கொண்டு ஜ்ஞானவிளக்கொளியாயும், நமன் றமரா லாராயப்பட் டறியாததும், தீவினை யகற்றி நல்வினையைப் பெருக்குவிப்பதுமான திருவரங்கப் பெருங்கோயிலுக்குச் சென்று பெரிய பெருமாளைத் திருவடி தொழப்பண்ணி ஆளவந்தாரைப் பார்த்து, 'உமது பூர்வர்கள் தேடிவைத்த மஹாநிதி இதுவே யென்றறியும்' என்று சொல்லிக் காட்டினார். ஆளவந்தாரும் பெரிய பெருமாளுடைய முடிவில்லதோரெழில் நீலமேனியை ஸேவித்து, 'பழுதே பலபகலும் போயின வென்றஞ்சி, யழுதேனரவணை மேற் கண்டு தொழுதேன்' என்று கண்ணுங் கண்ணீருமாய் அரங்

கத்தரவணைச் செல்வனை ஸேவித்து, அன்பான ஆநந்தத்தை அநுபவித்து, 'அண்டர்கோனணியரங்கனென்னமுதினைக், கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்றபடி அதுமுதல் செல்வப்புன் செருக்கற்று, மஹாவிரக்தராய் ஸகல போகங்களையும் துறந்து, அரங்கன் கழலிணையே சரணெனக் கிடந்தார். அவர் தம் ஆசிரியராகிய மணக்கால் நம்பிகளின் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து, "ஆசிரியவள்ளலே! தேவரீரது பெருமை யறியாது தேவரீரிடம் மிகவும் அபசாரப் பட்டேனே! என்னை வலியவந்து ஆட்கொண்டருளிய என் கருணைக் குருவே! தேவரீராலன்றோ அழியாப் பெருஞ் செல்வத்தை யடைந்து தர்சிக்கும் பேற்றினைப் பெற்றேன்! என் வாய்க்குச் சுவைதரக்கூடிய தூதுளையைக் கொய்து தந்து என் உயிரைக் கொள்ளை கொண்ட நின் கருணைத் திறத்தை என்னென்று வியப்பேன்! தேவரீரிடம் நான் பெரிதும் பிழைத்தேனே! நான் உய்வது எங்ஙனம்? என் பிதாமகன் வைத்துச் சென்ற பெருநிதி இன்னதென்று இன்றன்றோ அறிந்தேன்! தேவரீரது திருவருளால் பிறவிப் பெரும்பயன் பெற்றேன்! யான் பெற்ற பேற்றினை அமரரும் பெறுவரோ? அடியேனை உய்விக்க வந்த தேவரீரது கருணைத் திருமேனியைத் தர்சிக்குந்தோறும் என் உள்ளம் உருகுகின்றதே! நா தழுதழுக்கின்றதே" என்று அரற்றிக் கண்ணீர் பெருக்கிக் கதறி அழுதார்.

4. ஆளவந்தாரின் துறவு நிலை

ஆளவந்தார் திருவரங்கப் பெருநிதியை அநுபவித்துக்கொண்டு விஷயபோகங்களைத் துறந்து மஹாசீலராய் எழுந்தருளி யிருக்கையில் பெரிய நம்பி, திருக்

கோட்டியூர் நம்பி, பெரிய திருமலை நம்பி, மாறனேரி நம்பி, திருக்கச்சி நம்பி முதலிய இருபது சிஷ்யர்களும் அவரது திருவடிகளை ஆச்ரயித்து அவரிடம் வேதாந்த நூல்களைக் கற்று வந்தார்கள்.

இப்படி யிருக்கையில் மணக்கால் நம்பிகள் ஆளவந்தாரை நோக்கி, "நீர் குருகைகாவலப்பனை அடைந்து அவரிடம் சில ரஹஸ்யங்களைக் கற்றுத் தர்சநம் நிர்வஹித்துவாரும். யானறியாத சில ரஹஸ்ய விசேஷங்களை அவர் அறிவார்" என்று திருவுள்ளம் பற்றியருளி திருநாட்டுக் கெழுந்தருளினர். ஆளவந்தார் மிகவும் சோகித்துப் பின் அவரைப் பள்ளி படுத்துச் செய்யவேண்டிய சரமகைங்கர்யங்களைச் செய்து முடித்தனர்.

ஆளவந்தார் தமது ஆசார்யனின் நியமநப்படியே குருகைகாவலப்பன் எழுந்தருளியிருக்குமிடந் தேடிவந்து பார்க்கையில் அப்பன்யோகத்திலே எழுந்தருளி யிருந்தார். அவரது யோக நிலையைக்கலைக்க மனமிலராய் ஆளவந்தார் தும்முதல், இருமுதல், அடியோசைப் படுத்துதல் முதலியன செய்யாதே சுவர்ப்புறத்தே மௌனத்துடன் எழுந்தருளி யிருந்தார். அப்போது அப்பனும் கண்விழித்துப் பார்த்து அங்குள்ளோரை நோக்கி, 'சொட்டைக் குலத்தவர் எவரேனும் இங்கு வந்ததுண்டோ?' என்று வினவினர். உடனே ஆளவந்தார் அதிவிஸ்மயப்புற்று அவர் திருமுன் வந்து, 'அடியேன் யமுனைத் துறைவன் இதோ வந்துள்ளேன்' என்று விண்ணப்பித்து அவரது திருவடிகளில் விழுந்து பணிந்து, 'ஸ்வாமீ! அடியேனுக்கு யோக ரஹஸ்யத்தை அருளிச்செய்ய வேண்டும்'

என்று ப்ரார்த்தித்தார். அப்பனும் உகந்து, 'அப்படியே செய்கிறோம்' என்று கூறி நாளொன்று குறிப்பிட்டு அத்தினத்தில் தமக்குச் சரீராவஸானம் நேருமாகையின் அதற்கு முன்னுகை வரும்படி ஆஜ்ஞாபித்துத் திருமுகமொன் றெழுதிக்கொடுத்தார்.

5. தெய்வவாரியாண்டானின் குருபக்தி

ஒருநாள் திருவத்யயனோத்ஸவத்திலே அரையர் 'கேடுமிடர்' என்னும் திருவாய்மொழியைப் பாடிக்கொண்டே வருகையில், 'நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக் கறியச் சொன்னோம்' என்னும் பகுதியைப் பலதரம் ஆளவந்தாரை நோக்கிப் பாடியருளினர். உடனே ஆளவந்தார் அதனைக்கேட்டுக் களிப்புற்றுப் பெரிய பெருமாளிடம் அநுமதிபெற்று மடத்துக்குக் காவலாக தெய்வவாரி யாண்டானை வைத்துத் திருவநந்தபுரம் சென்றார். அங்குச் சென்று படமுடையரவில் பள்ளிபயின்ற அநந்தபுரத் தம்மானைத் திருவடி தொழுது அவ்விடத்திற் சில காலந் தங்கியிருந்தார். இருக்கையில் அப்பன் குறிப்பிட்ட நாள் குறுகியதோவென்று அறியவெண்ணி ஆளவந்தார் தம் சிஷ்யரை நோக்கி அப்பன் தந்தருளிய திருமுகத்தைக்கொண்டு வரும்படி ஆஜ்ஞாபித்தனர். அவர்கள் கொண்டுவந்த திருமுகத்தைப் பார்க்க மாஸமுந் திங்களும் அன்றாயிருத்தல்கண்டு துடிதுடித்து, 'இனி என்செய்வேன்' என்று மிகவும் சோகித்துக்கிடந்தார்.

ஆளவந்தார் திருவநந்தபுரத்தில் எழுந்தருளியிருக்கையில் திருவரங்கத்தில் அவர் நியமநத்தின்படியே மடத்துக்குக் காவலாயிருந்த தெய்வவாரி

யாண்டான் தம்மாசிரியரின் பிரிவினை ஆற்றாது தேகம் வாடிக் கிடந்தார். வைத்யர்களும், 'இவ் வாட்டம் அவருக்குள்ள மனக்குறையாலானதேயன்றி வியாதியாலன்று' என்று கூறிவிட தெய்வவாரியாண்டான் தமது மனக்குறையைத் தம்மைச்சேர்ந்தோர்க் கறிவித்தனர். அப்பால் அவர்கள் அவரைத் திருவநந்தபுரம் கூட்டிச் செல்லும்போதே இவர் திருமேனிவாட்டந் தீர்ந்தவரானார். ஆளவந்தாரும் திருவநந்தபுரம் விட்டுப் புறப்பட்டுத் திருவரங்கம்நோக்கி வந்துகொண்டிருந்தார். தெய்வவாரியாண்டான் தம் மாசிரியரை வழியில் கண்டு ஆநந்தித்து அவரது திருவடிகளில் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டுக் கிடந்தார். ஆளவந்தார் அவரைக் கண்டு, "ஆண்டானே! சக்ரவர்த்தித் திருமகனார் சூரரும் ஸ்வதந்த்ரருமாயிருந்தமையின் ஸ்ரீ பரதாழ்வான் அவராணைப்படி வைத்தவிடத்தே யிருந்தார். நான் சூரனுமல்லன்; ஸ்வதந்த்ரனுமல்லன்: அதனால்தான் நீர் மடத்தை விட்டுப் புறப்பட்டு ஈண்டடைந்தீர்" என்று கூற ஆண்டானும்மிகவும் வருத்தமுற்று நிலைகலங்கிச் சோர்வுற்றார். தமது திருவடிகளில் பணிந்தவர் மீண்டும் எழுந்திராததுகண்டு ஆளவந்தார் ஆண்டானைநோக்கி, 'என்னைச் சூரனும் ஸ்வதந்த்ரனு மாக்கினாலன்றி எழுந்திருக்க மனமில்லையோ?' என்று அருளிச்செய்தனர். அதைக்கேட்ட வாரியாண்டான் வெகு பரபரப்போடும் எழுந்து கூப்பிய கையராய்ச் செயலற்றுக் கிடக்கையில், ஆளவந்தாரும் மிகவும் மனமுவந்து 'மிகவும் மெலிந்தீரோ' என்று முதுகுதடவிக் குளிர வினவியருளினார். பின் ஆளவந்தார் திருவநந்தபுரத்துத் திருக்கோபுரத்தைச் சுட்டி தெய்வவாரியாண்

டானுக்குக்காட்டி அங்குச்சென்று ஆயிரம் பைந்தலைய வநந்த சயநனை ஸேவித்து வரும்படி அருளிச்செய்தார். அதைக்கேட்ட தெய்வவாரி யாண்டான், 'என்னுடைய அநந்தபுரம் எதிரேயிருக்க வேறோ ரநந்தபுரம் வேண்டேன்' என்று தமக்குள்ள ஆசார்ய ப்ரதிபத்தியைக் காட்டியருளினர். ஆளவந்தார் தெய்வவாரி யாண்டானைக் கூட்டிக்கொண்டு கோயிலுக் கெழுந்தருளித் தமது சிஷ்யகணத்தாருடன் தர்சனம் நிர்வஹித்து வந்தார்.

6. ஆளவந்தாரின் சரமதசையும் உபதேசமும்

ஆளவந்தார் தமது அந்திம தசையில் திருமேனி பாங்கில்லாமலிருக்கையில் திருவரங்கப் பெருமாளரையர் முதலியோர் அவரையணுகி அவருடைய திருவடிகளில் பணிந்து நின்று, 'அடியேங்களுக்கு உறுதி பயக்கவல்ல ரஹஸ்யார்த்தத்தை அருளிச்செய்ய வேண்டும்' என்று ப்ரார்த்தித்தனர். ஆளவந்தாரும் மிகவும் ப்ரீதியுடன், 'கோயிலாழ்வாரே உங்களுக்கு உயிர்நிலையென் றெண்ணிப் பெரிய பெருமாள் திருவடியின் கீழே வீணையுங் கையுமாய் ஸேவித்திருக்கும் திருப்பாணாழ்வார் விக்ரஹத்தைப் பாதாதி கேசாந்தமாக ஸேவித் தின்புற்றிருங்கள். 'எம்பெருமானுருள் தொழுவார் எப்போழுதும் என் மனத்தே யிருக்கின்றூரே' என்றபடி நீங்களும் பாகவத ப்ரதிபத்தியுடையராய் நற்கதி பெறுவீராக. உங்களுக்குத் திருமந்த்ரார்த்தமே போக மண்டபம், சரமச்லோகார்த்தம் புஷ்ப மண்டபம்; மந்த்ரார்த்தம் த்யாக மண்டபம். இதற்கு ப்ரமாதாக்கள் திருப்பாணாழ்வார் முதலா

ணோர்'' என்றருளிச்செய்து திருவரங்கப் பெருமாளரையரைத் தெண்டனிட்டுத் திருக்கோட்டியூர் நம்பியையும் பெரிய நம்பியையும் அவர் கையிலே காட்டிக் கொடுத்து அவர்களை நோக்கி, 'என் வ்யோகத்தில் நீங்கள் வ்யஸனிக்க வேண்டா. அப்படி வ்யஸனித்தால் உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி முதலிய ஆசார்யர்களின் திருவுள்ளத்தை மறந்தவராவீர்' என்று அருளிச்செய்தனர்.

பின் ஆளவந்தார் நீராடி ஸந்நிதி யடைந்து பெரிய பெருமாளின் திருமஞ்ஜனங் கண்டருளித் திருநெற்றிமாலை, தீர்த்தம், ப்ரஸாதம், பரியட்டம், ஸ்ரீ சடகோபன் முதலிய ஸகல மர்யாதைகளையும் பெற்று மடத்திற்குத் திரும்பினார். திருவரங்கப் பெருமாளரையர், திருக்கோட்டியூர் நம்பி, பெரிய நம்பி முதலிய பாகவதர்களுடன் தீர்த்தங்கொண்டு அவர்களை ஆளவந்தார் அமுது செய்வித்துத் திருவரங்கப் பெருமாளரையர் திருவடிகளில் தெண்டனிட்டு, 'அடியேனுடைய ஸர்வாபசாரங்களையும் பொறுத்தருள வேண்டும்' என்று ப்ரார்த்தித்து நின்றார். திருவரங்கப்பெருமாளரையரும், 'உமக்கு ஓர் அபசாரம் உண்டோ?' என்று கூறி அவரை முடி பிடித்தெடுக்க ஆளவந்தார் எழுந்திருந்து அமுது செய்து மற்றையோருடன் அளவளாவிக்கொண்டிருந்தார்.

7. பெரிய நம்பிகள் கச்சிக்குச் செல்லல்.

இருக்கையில், ஆளவந்தாரின் திருமேனிப் பாங்கின்மையைக் காஞ்சீபுரத்தி லிருந்த இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கேள்வியுற்று வருந்தி அவரை ஸேவிக்கத்

திருவுளங்கொண்டு ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருளினார்கள். அவர்கள் ஆளவந்தாரைக் கண்டு அவரது திருவடிகளிற் பணிந்து நிற்கையில் ஆளவந்தார் அவரது குசலம் வினவிப் பின், 'காஞ்சியில் ஸ்ரீஇளையாழ்வார் இப்போது யாது செய்துகொண் டிருக்கின்றனர்?' என்று உசாவினர். அவர்கள், 'யாதவ ப்ரகாசருக்கும் இளையாழ்வாருக்கும் நிகழ்ந்த மநஸ்தாபத்தால் இளையாழ்வார் அவரை விட்டு நீங்கிப் பேரருளாளனுக்குத் தொண்டுசெய்து வருகிறார்' என்று விண்ணப்பம் செய்துகொண்டனர். ஆளவந்தார் அவ்வுரை கேட்டு மிகவும் உவந்து, 'பேரருளாளர் தம் திருவருட்டிறந்தானென்னே!' என் றதிசயித்து ஸ்தோத்ர ரத்நத்தை அருளிச்செய்து அதைப் பெரியநம்பிகளிடம் கொடுத்து அவரை நோக்கி, 'இளையாழ்வார் யாதவ ப்ரகாசனை விட்டு நீங்கித் தேவப்பெருமானிடம் ப்ரவணராய் நிற்கிறார். நீர் உடனே சென்று அவரை இங்கு அழைத்து வாரும்' என்று கூறி அவரைத் திருக் கச்சிக் கனுப்பினார்.

௯. ஆளவந்தார் திருநாடலங்கரித்தல்

பின்பு ஆளவந்தாரின் திருமேனி நோவினால் தளர்ச்சியடைந்துகொண்டே வந்தது. ஒருநாள் அவர் நீராடிப் பெரிய பெருமாளைத் திருவடி தொழச் சென்று கோயில் ஸந்நிதியடைந்து ஸ்ரீரங்கநாதனைத் தன் மனமார ஸேவித்துத் திருவடிக்கீழ்த் திருப்பாணாழ்வாரையும் சேர அநுபவித்து ஸ்ரீ சடகோபன், தீர்த்தம், ப்ரஸாதம் முதலியன பெற்று மடத்திற் கெழுந்தருளினார். பாகவதர்களைத் ததீயாராதனஞ் செய்வித்துப் பின் அந் நகரிலுள்ளாரையும் கோயிற் கைங்கர்யம் நடத்தி வருவோரையும் அழைப்பித்து

அவர்களை நோக்கி, 'பெரிய பெருமாளுடைய திருவாராதனம், திருமந்த்ர புஷ்பம் முதலியவற்றைக் கால காலத்திலே நடத்தி வாருங்கள். ஆசார்யர்களையும் பாகவத ஸ்ரீ வைஷ்ணவர்களையும் தேசாந்த்ரிகளையும் ஆதரித்து வாருங்கள்' என்று நியமித்து அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார். பின் ஆளவந்தார் தமதாசார்யரான மணக்கால் நம்பியை த்யானித்துக் கொண்டு பத்மாஸனத்தில் யோகத்தில் எழுந்தருளியிருந்தார். மணக்கால் நம்பிகளின் திருவடிகளைத் தமது நெஞ்சிலும் கண்ணிலும் திருமுடியிலும் ஒற்றிக் கொண்டு ஆளவந்தார் ப்ரஹ்மரந்த்ரத்தாலே திருநாட்டுக் கெழுந்தருளினார்.

திருவரங்கப்பெருமாளரையர் முதலான யாவரும் வேரற்ற மரம்போல் விழுந்து கதறிச் சோகிக்க அங்குள்ளார் இவர்களைத் தேற்றி ஆளவந்தாரின் திருக்குமாரரான பிள்ளைக்கரசு நம்பியைக் கொண்டு செய்ய வேண்டிய கர்மங்களைக் குறைவற முடிப்பித்தனர். 'திருவாசல் திருவலகிட்டுத் திருநீர் பரிமாறி ஸ்தல சுத்தி பண்ணித் திருக்காவண மிட்டுக் கோடித்து தர்ப்பமாலை கட்டிச் செங்கழுநீர் மாலை கட்டி, பல பட்டுக்களாலும் சாமரங்களாலும் குச்சுக்கட்டி யலங்கரித்து, திருக்காவணத்தின் நாலு வாசலிலும் கதலித் தாறு நாற்றி, இளங் கமுகுக் கரும்பு நாட்டி, பல பலங்கள் நாற்றி, நாலு வாசலிலும் கொடியாடை நாற்றி, சித்ர பத்ரங்களை வைத்து, பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர த்வாரங்களிலே பலாச, அச்வத்த, கதிர, உதும்பர தோரணங்கள் நாற்றி அலங்கரித்து, திருக்காவணத்தில் த்ரோணவ்ரீஹி சொரிந்து பரப்பி,

நடுவே பூர்ணகும்பம் வைத்து, நான்கு கோணங்களி லும் பூர்ண கும்பங்களை வைத்து, கேசவாதி த்வாதச நாமோச்சாரணத்துடன் த்வாதச கலசங்களைத் தாபித்து, அவற்றுக்குப் புஷ்பமிட்டுப் பின் கும்பார்ச் சனை பண்ணிப் பஞ்சாம்ருத ஸ்நாநம் செய்வித்துப் பின்பு ஸ்ரீ புருஷ ஸூக்தத்தாலே திருமஞ்ஜனம் செய் வித்தனர்.

பின் பிள்ளைக்கரசு நம்பிகள் திருமுற்றவாயிலில் சுத்தமான ஸ்தலத்திலே கலசங்களைத் தாபித்து, பெரு மாள் சாத்திக் களைந்து வரவிட்டருளின திருமாலை திருப்பரியட்ட ப்ரஸாதங்களைத் தெற்கேவைத்து ஆள வந்தாரைத் தெண்டனிட்டு அவரது விமல சரம விக்ரஹத்தை நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் தேக்கிக் கொண்டு அரையர் திருப்பல்லாண்டு, கண்ணி நுண் சிறுத்தாம்பு, 'சூழ்விசும்பணி முகில்' முதலியவற்றை இயலுடன் இசையாக அநுஸந்திக்கவும் திவ்ய ந்ருத்த கீதவாத்யங்களுடன் திருவிருத்தம் அநுஸந்தித்து வலம்வந்து மடத்துவாயிலில் இயல்சாத்தி திவ்யதைல திவ்ய சூர்ணங்கள் சாத்தி நீராட்டிப் பெருமாள் சாத்திக்களைந்தருளிய திருமாலை, பீதாம்பரம் முதலிய வற்றை ஆளவந்தாருக்குச் சாத்தி அலங்கரித்தனர். பின் ஆளவந்தாரது திருமேனியிற் சாத்திக்களைந்த ஸ்ரீசூர்ணம் முதலியவற்றை அங்குள்ள ஸ்ரீவைஷ்ண வர்களுக்கு வழங்க அவர்கள் பெற்று, ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே விழுந்து அவரது திருவடிகளைத் தம் கண்களிலும் மார்பிலும் முடியிலும் தரித்துச் சோகித் துப் பின்தேறி மெள்ள நடையிட்டு பீடயாநத்திலே ஆளவந்தாரை யேறி யருளப்பண்ணி ஸ்ரீ பாதம்

தாங்கித் திருச்சங்கு பணிமாற ந்ருத்தகீதவாத்யங்கள் எங்கும் முழங்க, வேதபாராயணம் பண்ண, அருளிச் செயல் இயல் நடக்க, நடை பாவாடையிட்டு கரும்புங் குடையுமேந்தி, பொரியும் புஷ்ப புஞ்சமும் எங்குஞ்சிதற, ஸுமங்கலிகள் மங்கள தீபமேந்தி முன்னே செல்ல, இருபக்கமும் சாமரமிரட்ட, வெள்ளை வட்டமிட 'ஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளினார்!' என்று திருச்சின்னம் பணிமாற திருவீதிகள் தோறும் வலம்வந்து திருக்கரம் பன்றுறையிலே யெழுந்தருள் வித்துக்கொண்டு போய் த்வ்யஸ்தல சுத்திபண்ணிக் கனித்து பள்ளிபடுத்தத் தொடங்கினார்கள்.

9. இளையாழ்வாரின் ப்ரதிஜ்ஞை.

நிற்க, பெரிய நம்பிகள் பெருமாள் கோயிலுக் கெழுந்தருளி ஆளவந்தார் திருமேனியில் நோவுசாத்தியிருந்ததைத் திருக்கச்சி நம்பிக்கு அருளிச்செய்து அவரை முன்னிட்டுக்கொண்டு பேரருளாளர் ஸந்நிதிக்குச்சென்று ஸ்தோத்ர ரத்நை ஸந்தானத்துடன் தேவராஜனை ஸேவித்து நின்றார். தீர்த்தம் முதலிய ப்ரஸாதங்களைப்பெற்று ஸந்நிதி யினின்றும் மீள் கையில் பேரருளாளன் திருமஞ்ஜனத்திற்கு ராமாநுஜன் தீர்த்தமெடுக்கும் சாலைக்கிணறு குறுக்கிட அங்குத்தானே நின்றுகொண்டு ஆளவந்தார் ஸ்தோத்ரத்தை அநுஸந்தித்துக்கொண்டிருந்தார். அவர் எதிர் பார்த்தபடியே அங்கு எழுந்தருளிய உடையவர் அந்த ஸ்லோகத்தைக் கேட்டதும் வியப்புற்று ப்ரமித்து நின்று பெரிய நம்பிகளை நோக்கி, 'அதனை அருளிச்செய்தார் யார்?' என்று வினவியருளினர். பெரிய நம்பிகளும் எண்ணியது பலித்த தென்று

அகங்களித்து ஆளவந்தாரின் மஹிமையை எடுத்துரைத்து ஸ்ரீரங்கப் பெருநகரில் அவர் திருமேனியில் நோவு சாத்தியிருத்தலையும் அவர் ராமாநுஜனைப் பார்க்க விரும்பியதையும் அறிவித்தனர்.

உடனே ராமாநுஜன் பேரருளாளர்க்குத் திருமஞ்ஜன தீர்த்தம் கொண்டு சென்று அப்பெருமானை ஸேவித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பெரிய நம்பியுடன் புறப்பட்டு ஸ்ரீரங்கம் நோக்கி வந்துகொண்டிருந்தார். திருநாட்டுக் கெழுந்தருளிய ஆளவந்தாரை பள்ளிபடுத்துதற்காகத் திருக்காம்பன் றுறைக்குச் சென்றுகொண்டிருந்த கூட்டத்தாரைக் கண்டு, 'எங்குச் செல்கின்றீர்கள்?' என்று கேட்க அவர்கள் ஆளவந்தார் இறந்தடியைக்கூறினார்கள். இளையாழ்வாரும் அச்செய்தியைக் கேட்டுத்துடி துடித்துத் துக்கக்கடலில் மூழ்கிப் புலம்பிக் கிடக்கையில் பெரிய நம்பிகள் முதலானோர் தேற்றத்தேறி, அவருடன் திருக்காம்பன் துறையை அடைந்து ஆளவந்தாரின் விமல சரம விக்ரஹத்தை ஆபாதசூடமா ஸேவித்து இருக்கையில் ஆளவந்தாரின் விரல்களில் மூன்று முடங்கி யிருத்தலைக்கண்டு வியப்புக்கொண்டு அங்குள்ளோரை நோக்கி, "ஜீவதசையிலும் இவர் கைவிரல்கள் முடங்கியிருத்தல் உண்டோ" என்று வினவியருளினர். அவர்கள், 'இதற்கு முன் நாம் இதைக் கண்டதில்லை. இது இப்போது தோன்றுவதேயாம்' என்று விண்ணப்பித்தனர். இளையாழ்வார் அவ்வுரை கேட்டு, 'இவர் உள்ளத்தில் ஏதேனும் குறையிருக்க வேண்டு'மென்று அநுமானித்து, அங்குள்ளோ நோக்கி, 'ஆளவந்தாரது அபிமத ஸல்ல அறிந்தவர் யாரேனு மிங்குண்டோ?'

வினர். அரையர் முதலானோர், 'அவருக்குச் சில மனக்குறைகளுள்ளன வாகப் பல முறைக்குறிப்பித்திருப்பதுண்டு. வ்யாஸபராசரரிடத்தில் உபஹார ஸ்ம்ருதியும், நம்மாழ்வார் பக்கல் ப்ரேமை மிகுதியும், வ்யாஸ ஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைதபரமாக வ்யாக்யாந வாஞ்சையும் அவருக்கு எப்போதும் இருந்த துண்டு. இதனையன்றி வேறொன்றும் யாமறியோம்' என்று கூறினர். உடனே இளையாழ்வார், 'இச்சரீரம் த்ருடமாய் இவ்வாசார்ய க்ருபையும் அடியேனிடத்தில் பரிபூர்ணமாய் இருந்து ஸர்வேச்வரன் அடியேன் நினைந்தபடி கூட்டிவைப்பானாகில் இம் மூன்றினையும் தீர்க்கக் கடவேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணியருளினார்.

இங்ஙனம் அவர் கூறியதும் ஆளவந்தாரின் முடங்கிய விரல்கள் மூன்றும் நிமிர்ந்தன. இவ்வதிசயத்தைக்கண்டு அங்குக் குழுமியிருந்தோர் அனைவரும் அதிவியப்புற்று, 'அற்புதம்! அற்புதம்!!' என்று கூறி ராமாநுஜரை வியந்து கொண்டாடினார்கள். அங்குள்ள முதியோர் ராமாநுஜரைப் பார்த்து, 'இவ்வாசார்ய க்ருபையும் உம்மிடத்திலே யுண்டு; இவருடைய திவ்ய சக்தியும் உம்மிடத்திற் கூடும்; நீரே இத்தர்சனத்திற்கு நிர்வாஹகராவீர்' என்று கூறினார்கள். ராமாநுஜரும் ஆசார்ய க்ருபை இருந்த வாற்றினை நினைந்து நினைந்து மனமுருகி அவரை ஜீவதசையில் தாம் காணமுடியாமைக்கு மிகவும் வருந்தினார். மீண்டுமொருமுறை ஆசார்ய விக்ரஹத்தை ஸேவித்துக் கண்ணிலும் ப்ரமிநசிலும் தேக்கிக்கொண்டார். பின்னர் ஆளவந் அருளிச் களித்துத் திருப்பள்ளி படுத்துச் செய்ய பெரிய நயக்ருத்யங்களெல்லாஞ் செய்தருளினார்கள்.